இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 239 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 27 – வெள்ளிக்கிழமை 10 ஏப்ரல் 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 239 : Thiruvalluvar Year - 2057 - Panguni 27 - Friday 10 April 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## அருணை மாநகரில் மக்கள் திரளிடையே முதல்வர் மு.க.ஸ்டாலின் நடைபயிற்சியில் வாக்குச் சேகரித்த காட்சி!



கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.4.2026) காலை திருவண்ணாமலையில் நடைபயணம் மேற்கொண்டபோது, அங்கு பொதுமக்களைச் சந்தித்து, திருவண்ணாமலை தொகுதி கழக வேட்பாளர் அமைச்சர் எ.வ.வேலு அவர்களை ஆதரித்து வாக்குச் சேகரித்தார்.



கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.4.2026) காலை திருவண்ணாமலையில் நடைபயணம் மேற்கொண்டபோது அங்குள்ள தேநீர் கடையில் தேநீர் அருந்தினார். உடன் திருவண்ணாமலை தொகுதி கழக வேட்பாளர் – அமைச்சர் எ.வ.வேலு, கீழ்பெண்ணாத்தூர் தொகுதி கழக வேட்பாளர் – துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி ஆகியோர் உள்ளனர்.

## தொகுதி மறுவரையறை ஆபத்து: சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கிறதா இந்தியா?

# தென்றலாக இருக்கும் தெற்கை புயலாக மாற்றாதீர்!

## ஒன்றிய பா.ஜ.க.வுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் எச்சரிக்கை!

**சென்னை, ஏப். 10 -**

**“தொகுதி மறுவரையறை ஆபத்து என்றும் சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கிறதா இந்தியா?” என்றும் “தென்றலாக இருக்கும் தெற்கைப் புயலாக மாற்றாதீர்கள்” என்றும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தொகுதி மறுவரையறை ஆபத்து: சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கிறதா இந்தியா?

தென்றலாக இருக்கும் தெற்கைப் புயலாக மாற்றாதீர்கள்!

- தென்னக மக்களின் நியாயமான கேள்விகளுக்கு பிரதமர் அவர்கள் பதிலளித்தே தீர வேண்டும்!
- தொகுதி மறுவரையறையை எப்படி நடத்தப் போகிறார்கள் என வெளிப்படையாக அறிவிக்காமல், ஒன்றிய பா.ஜ.க. அரசு இதுவரை இரகசியம் காப்பது ஏன்?
- 2001-ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள், அடுத்த 25 ஆண்டுகளுக்குத் தொகுதி மறுவரையறையை ஒத்திவைத்ததைப் போல, பிரதமர் மோடி அவர்களும் செய்ய வேண்டுமெனத் தென் மாநிலங்கள் முன்வைத்த நியாயமான கோரிக்கைக்குப் பிரதமர் அவர்களின் பதில் என்ன?
- 5 மாநிலத் தேர்தல்களுக்கு இடையே அவசர அவசரமாக நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத்தொடரைக் கூட்டுவதற்கு என்ன அவசியம்?
- “நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத் தொடரை ஏப்ரல் 29-க்குப் பிறகு கூட்ட வேண்டும்” என்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் நியாயமான கருத்தை உதாசீனப் படுத்துவதில் மறைந்துள்ள மர்மம் என்ன?
- அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டிக் கலந்தாலோசிக்காமல் மிக முக்கியமான அரசியலமைப்புத் திருத்தங்களை மேற்கொள்ளும் முயற்சி சர்வாதிகாரமன்றி வேறென்ன?
- எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் கேட்கும் கேள்விகளுக்குத்தான் பதில் சொல்வதில்லை. மக்களின் கேள்விகளுக்கேனும் பதில் கிடைக்குமா?
- தென்மாநிலங்களின் உரிமைக்கு உலை வைத்து, வடக்குக்கு வலிமையை வாரி வழங்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் செயல்களைத் தி.மு.க. பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது.
- இது இங்கு வாழும் மக்களின் எதிர்காலம்! எங்கள் அனுமதியின்றி, எங்களோடு பேசாமல் இதுதொடர்பாக எந்த முடிவு எடுத்தாலும் நாங்கள் அதற்கு உயிரே போனாலும் உடன்பட மாட்டோம்!

நாங்கள் கேட்பது #FairDelimitation!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



## துடைத் தெறியப்பட வேண்டிய பழனிசாமியை, தோளில் சுமக்கும் பா.ஜ.க.;
## இரண்டையும் தூக்கி எறிய ஓய்வின்றி உழைக்கும் ஸ்டாலின் வெல்லட்டும்!

